**O.S.No.21/2018** **தேதி – 27.07.2026**

**பி.வா.சா.3. – மேகலாதேவி**

**பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை**

எங்களது அலுவலகத்தில் சமூகம் நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததின் அடிப்படையில் ஆஜராகியுள்ளேன். எனக்கு சாட்சி சொல்ல அங்கீகார கடிதத்தை வருமான வரி அதிகாரி, வார்டு எண்.3, விருதுநகர் வழங்கியுள்ளார். என்னிடம் காட்டப்படும் அங்கீகார கடிதம் C.W.1 ஆகும். நான் 2014 ம் ஆண்டிலிருந்து வருமான வரி அலுவலகத்தில் பணிபுரிகிறேன். தற்போது அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். PAN No. ACKFS6109C யார் பெயரில் உள்ளது என்றால் ஸ்ரீ லலிதாம்பிகை காட்டன் ஏஜென்சி பெயரில் உள்ளது. அதன் முழு முகவரி நம்பர் 112 ஏ, காட்டன் மார்க்கெட், ராஜபாளையம் – 626 117 ஆகும். இந்த வருமான வரி எந்த தேதியில் தொடங்கப்பட்டது என்றால் 26.09.2013. மேற்படி வருமான வரி கணக்கிற்கான தரவுகள் குறித்த PAN Data Base Screen Shot–ன் உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். இந்த வருமான வரி கணக்கு இன்றைய தேதி வரை நிலுவையில்தான் இருந்து வருகிறது, இறுதியாக மேற்படி வருமான வரி ஆண்டு 2025–2026 வரை வருமான வரி படிவம் தாக்கல் செய்துள்ளனர், மேற்படி Screen Shot–ன் அத்தாட்சி பெற்ற நகலை தாக்கல் செய்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு முதல்விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.